# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை
# யூன் 2022.06.16

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் யூன் மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.06.16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.10 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை கீழ்க்காணும் அங்கத்தவர்கள் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
2. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
3. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
4. கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன்
5. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
6. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
7. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
8. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
9. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
10. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
11. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன்
12. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
13. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
14. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்
15. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா
16. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
17. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
18. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
19. கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா
20. கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ்
21. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
22. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
23. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
24. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
25. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
26. கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன்
27. கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா
28. கௌரவ உறுப்பினர் சுபாஸ்கரன் சந்திரமதி
29. கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன்
30. கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன்
31. கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ்
32. கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ்
33. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
34. கௌரவ உறுப்பினர் சிவபாலசுந்தரம் ஹரிகரன்
35. கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன்

- கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 50வதுகூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர்,கௌரவ உறுப்பினர்கள், சபையின் பதில் செயலாளர்,பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே நாட்டின் தற்கால சூழ்நிலையில் கொவிட் 19, டெங்கு நோய்களின் பரவலில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டி உள்ளது. இதில் சுற்றாடலும் வாழ்வசதிகளும் குழுவின் செயற்பாடு முக்கியமானதாகும். அந்த வகையில் சுகாதார நலன்புரி சேவைகள், பயன்படுத்தப்படாத காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் போன்வற்றில் கவனம் செலுத்த வேண்டும். டெங்குநோயை கட்டுப்படுத்தும் செயற்பாட்டிற்கு எரிபொருளை பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலைகள் நாளாந்தம் மாற்றமடைவதால் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்ற போதும் மக்களுக்கான சேவைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். கௌரவ உறுப்பினர்கள் பதவி விலகும் போது சபையின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பது அவசியமாகும். கௌரவ உறுப்பினர்கள் இதுவரை காலமும் வழங்கிய ஒத்துழைப்பை இனிவரும் காலங்களிலும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

  ❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் காலை 10.18 மணிக்கு வருகை தந்தார்.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 19.05.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

▪ மே மாதம் 19.05.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

➢ அடுத்து 25.05.2022, 15.06.2022ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டங்களின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Popular Motor Stores, Stanley Road, Jaffna | LL 7280 ஆம் இலக்கவாகனத்திற்கான ரயர் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 127,600.00 |
| 02 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Copier கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 415,800.00 |
| 03 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Printer - 02 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 126,000.00 |
| 04 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் அமைத்தல்- காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான மூன்றாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,211,647.34 |
| 05 | Jana Civil Work,Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் PT நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Reconstruction of Thaiyiddipulam Road வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 5,762,488.00 |
| 06 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | சபைநிதி- 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thampuliyakadavai Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,231,540.00 |
| 07 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Saloon Road & Saloon Road 1st Left Site Lane வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,802,130.50 |
| 08 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Soda Company Road 2nd Right Site Lane, 1st Right Site by Lane வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,007,106.00 |
| 09 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | சபைநிதி- 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Kuruman Anikkai Road – Kadduvan வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 526,995.00 |
| 10 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | சபைநிதி- 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Airport Front Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,212,888.40 |

| | | | |
|---|---|---|---|
| 11 | World Construction, Mavady, Moolai Road, Vaddukkoddai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Palaly South Colony Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 627,435.00 |
| 12 | Star Advertising,Inuvil | K Form பிரதியிட்டமைக்கான கொடுப்பனவு | Rs 150,000.00 |

**தீர்மான இல: 01/16.06.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Popular Motor Stores, Stanley Road, Jaffna | LL 7280 ஆம் இலக்கவாகனத்திற்கான ரயர் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 127,600.00 |
| 02 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Copier கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 415,800.00 |
| 03 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Printer - 02 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 126,000.00 |
| 04 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் அமைத்தல்- காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான மூன்றாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,211,647.34 |
| 05 | Jana Civil Work,Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் PT நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Reconstruction of Thaiyiddipulam Road வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 5,762,488.00 |
| 06 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | சபைநிதி- 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thampuliyakadavai Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,231,540.00 |
| 07 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Saloon Road & Saloon Road 1st Left Site Lane வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,802,130.50 |
| 08 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Soda Company Road 2nd Right Site Lane, 1st Right Site by Lane வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,007,106.00 |
| 09 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | சபைநிதி- 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Kuruman Anikkai Road – Kadduvan வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 526,995.00 |
| 10 | Yaso Engineers & Contractors,Erlalai East, Erlalai | சபைநிதி- 2022 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Airport Front Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,212,888.40 |
| 11 | World Construction, Mavady, Moolai Road, Vaddukkoddai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Palaly South Colony Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 627,435.00 |
| 12 | Star Advertising,Inuvil | K Form பிரதியிட்டமைக்கான கொடுப்பனவு | Rs 150,000.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வட்டாரம் - 20, கோணப்புலம் வீதியில் ஆதன இல 100, சொக்கநாதன் வைரவநாதன் பெண் கனகநாயகி ஆகியோரின் ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக கந்தசாமி பகீரதன் பெண் சுவர்ணகலா விண்ணப்பித்திருந்தனர். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்குசபையின் அனுமதிக்காககௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

  - கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது ஆதன மீள்மதிப்பிடு செய்யப்பட்டுள்ளமையால் வெளிப்படுத்தல் உறுதி ஆதனங்களின் பெயர் மாற்றம் செய்வதற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்தி எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாவிட்டால் சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
  - கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் அயலவர்களிடம் விசாரித்து எழுத்து மூல ஆவணங்களுடன் பெயர் மாற்றம் செய்வது சிறப்பாக அமையும் எனத் தெரிவித்தார்.

- ❖ கௌரவ உப தவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம் அவர்கள் வெளிப்படுத்தல் உறுதிகளை பெயர் மாற்றம் செய்யும் போது அதிகளவு கவனம் செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 02/16.06.2022**

வட்டாரம் - 20, கோணப்புலம் வீதியில் ஆதன இல 100, சொக்கநாதன் வைரவநாதன் பெண் கனகநாயகி ஆகியோரின் ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக கந்தசாமி பகீரதன் பெண் சுவர்ணகலா விண்ணப்பித்திருந்தனர். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ வட்டாரம் - 20, கோணப்புலம் வீதியில் ஆதன இல 100, சொக்கநாதன் வைரவநாதன் பெண் கனகநாயகி ஆகியோரின் ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக துரைசிங்கம் கஜனும் பெண் கீதாவும் விண்ணப்பித்திருந்தனர். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு சபையின் அனுமதிக்குகௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 03/16.06.2022**

வட்டாரம் - 20, கோணப்புலம் வீதியில் ஆதன இல 100, சொக்கநாதன் வைரவநாதன் பெண் கனகநாயகி ஆகியோரின் ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக துரைசிங்கம் கஜனும் பெண் கீதாவும் விண்ணப்பித்திருந்தனர். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்குஅனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ சபை நிதி, அபிவிருத்தி நிதி மூலம் மேற்கொள்ளப்படும் பின்வரும் வேலைகளுக்கு 10.03.2022 ஆம் திகதி நடைபெற்ற கேள்வி திறத்தலின் போது கேள்விச்சபை உறுப்பினரான சபையின் செயலாளர் திரு.இ.பகீரதன் அவர்கள் மருத்துவ விடுமுறை பெற்றிருப்பதனால் அவருக்கு பதிலாக திருமதி.ஞா.சுதாயினி அவர்களை கேள்விச்சபை உறுப்பினராக நியமித்தமைக்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
    1) Renovation of Thaneerthazhvu Vairavar Kovil Balance Work
    2) Renovation of Appachchippillai Road 3rd, 4th& 5th Right Lane
    3) Renovation of Palaly North Colony Road

**தீர்மான இல :- 04/16.06.2022**

சபை நிதி, அபிவிருத்தி நிதி மூலம் மேற்கொள்ளப்படும் பின்வரும் வேலைகளுக்கு 10.03.2022 ஆம் திகதி நடைபெற்ற கேள்வி திறத்தலின் போது கேள்விச்சபை உறுப்பினரான சபையின் செயலாளர் திரு.இ.பகீரதன் அவர்கள் மருத்துவ விடுமுறை பெற்றிருப்பதனால் அவருக்கு பதிலாக திருமதி.ஞா.சுதாயினி அவர்களை கேள்விச்சபை உறுப்பினராக நியமித்தமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1) Renovation of ThaneerthazhvuVairavarKovil Balance Work
2) Renovation of Appachchippillai Road 3rd, 4th& 5th Right Lane
3) Renovation of Palaly North Colony Road

- ➢ தீர்மான இல : 08/19.05.2022 இன் பிரகாரம் சபைநிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்ததாரர் மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமம் காரணமாக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கானசபையின் தழுவு அனுமதிக்குகௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Construction of Palaly North Colony Road | Mahan Enterprises Construction & Engineering | 2,219,035.00 |

**தீர்மான இல :- 05/16.06.2022**

தீர்மான இல : 08/19.05.2022 இன் பிரகாரம் சபைநிதி – 2022 மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்ததாரர் மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமம் காரணமாக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான தழுவுஅனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசாஅவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Construction of Palaly North Colony Road | Mahan Enterprises Construction & Engineering | 2,219,035.00 |

- தீர்மான இல : 09/19.05.2022 இன் பிரகாரம் அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்ததாரர் மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமம் காரணமாக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) - Kurumpasiddy | Mahan Enterprises Construction & Engineering | 2,171,008.00 |

**தீர்மான இல :- 06/16.06.2022**

தீர்மான இல : 09/19.05.2022 இன் பிரகாரம் அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான இரண்டாவது தகுதியினைப் பெற்ற ஒப்பந்ததாரர் மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமம் காரணமாக தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பிரகாரம் வேலைகளை மேற்கொள்ள முடியாது என அறியத்தந்துள்ளமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| Se.No | Project | Contractor | Contract Amount |
|---|---|---|---|
| 01 | Reconstruction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) - Kurumpasiddy | Mahan Enterprises Construction & Engineering | 2,171,008.00 |

- பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் செயற்திறன் பரிமாற்ற நிதியின் மூலம் செயற்படுத்தப்படவுள்ள பின்வரும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு கேள்வி திறக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மேற்படி வேலைகளினை வழங்க கேள்விச்சபையால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்களுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியமைக்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| S. No | Name of Work | Contract Amount | Contractor name |
|---|---|---|---|
| 1 | Construction of Toilet at Kankesanthurai Market | 4.02 Mn | Jana Civil Work |
| 2 | Improvement of stalls at Keerimalai Market | 3.02Mn | SP Engineering |
| 3 | Reconstruction of Thaiyiddipulam Road | 9.82 Mn | Jana Civil Work |

**தீர்மான இல :- 07/16.06.2022**

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் செயற்திறன் பரிமாற்ற நிதியின் மூலம் செயற்படுத்தப்படவுள்ள பின்வரும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு கேள்வி திறக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு மேற்படி வேலைகளினை வழங்க கேள்விச்சபையால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்களுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| S. No | Name of Work | Contract Amount | Contractor name |
|---|---|---|---|
| 1 | Construction of Toilet at Kankesanthurai Market | 4.02 Mn | Jana Civil Work |
| 2 | Improvement of stalls at Keerimalai Market | 3.02Mn | SP Engineering |
| 3 | Reconstruction of Thaiyiddipulam Road | 9.82 Mn | Jana Civil Work |

- ❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் பன்னாலையில் பாடசாலைக்கு அருகின் கழிவுகள் கொட்டப்பட்டு துர்நாற்றம் வீசுகின்றதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இதனை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கழிவகற்றல் செயற்பாடுகளை எமது சுற்றாடலும் பொது வசதிகளும் குழு மேற்பார்வை செய்வது சிறப்பாக அமையும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் கௌரவ உறுப்பினர்கள் தங்கள் பிரதேசங்களின் கழிவகற்றல் அட்டவணையினை பார்வையிட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மக்கள் எமது ஊழியர்கள் கழிவுகளை அகற்றி சென்ற பின் உடனேயே கழிவுகளை போடுகின்றனர். சுகாதார நலன் பேணக் கூடிய வகையில் மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். எமது பிரதேசம் வளமான விவசாய பிரதேசமாகும். கழிவுகளை விவசாயத்திற்கு பசளையாக பயன்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ அடுத்து கௌரவ தவிசாளர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் செய்ய ஊக்கமுடையவர்களின் விபரங்களை கௌரவ உறுப்பினர்கள் சமர்ப்பிக்க முடியும். மேலும் கௌரவ பெண் உறுப்பினர்கள் ஊடாக தற்கால உணவு பாதுகாப்பிற்காக விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் உணவு பஞ்சத்தை தடுக்க சிறுபோக நெல்களை மக்கள் கொள்வனவு செய்து சேமிப்பதற்கு அறிவுறுத்த வேண்டும். வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையையும் இயற்கை எரிவாயு உற்பத்தியையும் ஊக்குவிக்க வேண்டும். சமையலிற்காக இரட்டை சூட்டு அடுப்பை பயன்படுத்துவதன் மூலம் விறகை சேமிக்க முடியும். இவை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் பிரதேச செயலகத்தால் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக கிராம முன்னேற்ற சங்கத்தினூடாக பணம் செலுத்தி மக்களுக்கு இலவசமாக விதை தானியம் வழங்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மீள் சுழற்சி கடன் மூலம் மக்களுக்கு விதை தானியம் வழங்க முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் நல்லூர் செம்மணி வீதியில் பொறியலாளர் ஒருவர் இயற்கை பசளைகளை பயன்படுத்தி வீட்டுத்தோட்டம், இயற்கை எரிவாயு உற்பத்தி போன்றவற்றை செய்து வருகின்றார். அவருடன் கலந்துரையாடி மக்களுக்கு வழிகாட்டல்களை வழங்க முடியும். மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு புலம்பெயர் மக்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாய போதனாசிரியர்களுடன் கலந்துரையாடி கிராம சேவையாளர் பிரிவுகளில் வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு போன்ற செயற்பாடுகள் நடவடிக்கை மேற்கொள்ள முடியும். மேலும் உணவுப் பாதுகாப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடு, வீடு இருந்து மலசலகூடம் இல்லாத மக்களுக்கு மலசலகூட வசதி வழங்கல் போன்றவற்றில் கௌரவ உறுப்பினர்கள் கரிசனையுடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் எமது பிரதேச பாடசாலை தற்போது தரம் 11 வரையான வகுப்புக்களை கொண்டதாக தரமுயர்த்தப்பட்டள்ளது. எனவே வாரம் ஒரு முறை மாணவர்களுக்கான குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் பாடசாலைக்கான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.

  - ▪ அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான மே மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு மே மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் காலை 11.43 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியினை பெற்று சபையிலிருந்து வெளியேறினார்.

➢ அடுத்து 16.06.2022 ஆம் திகதி இன்று காலை நடைபெற்ற சுற்றாடலும் வாழ் வசதிகளும் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
   - இக்குழுவின் தலைவராக கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் தெரிவு செய்யப்படார்.
   - காங்கேசன்துறை பூங்காவில் கழிவுகள் கழிவகற்றல் தொட்டியில் இருந்து வெளியில் சிதறிக் காணப்படுகின்றது.
   - கீரிமலை மயானம் பற்றையாக நீர் வசதி இன்றி காணப்படுகின்றது.
   - அளவெட்டி மயானம் துப்பரவு செய்யப்பட வேண்டும்
   - பராமரிப்பு இன்றி பற்றையாக உள்ள காணிகளுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தல்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் காங்கேசன்துறை பூங்காவில் செவ்வாய்க்கிழமைகளில் கழிவகற்றல் இடம்பெறுகின்றது. பற்றையாக உள்ள விவசாய நடவடிக்கைக்கு பொருத்தமான காணிகளை இனங்கண்டால் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

   - ❖ கௌரவ உறுப்பினர்களான ஐயாத்துரை மயூரன், பொன்னம்பலம் ஆதவன் ஆகியோர் காலை 11.48 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியினை பெற்று சபையிலிருந்து வெளியேறினர்.

➢ அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் குடும்ப பங்கீட்டு அட்டை கிராம சேவை உத்தியோகத்தரிடம் மீளாய்விற்காக சமர்ப்பித்தால் மீள பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 6 மாதங்கள் எடுக்கின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். குடும்ப பங்கீட்டு அட்டை மீளாய்வின் பின் உரிய காலப்பகுதியில் மக்களுக்கு கிடைக்க வேண்டியது அவசியம். தற்போதைய சூழ்நிலையில் எரிபொருளிற்காக விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கி வருகின்றனர். விவசாயம் செய்யும் அனைவருக்கும் விவசாய பங்கீட்டு அட்டை வழங்கப்பட வேண்டும். அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகள் பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும். சில பகுதிகளில் பயனாளிகளுக்கு உரிய விபரங்கள் தெரிவிக்கப்படுவதில்லை. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் கழிவகற்றல் செயற்பாட்டின் போது மூட்டையாக வைக்கப்படும் கழிவுகளையே அகற்றுகின்றனர். ஏனையவற்றை அந்த இடங்களில் எரிப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இதனால் மதில், தகர வேலிகள் பாதிக்கப்படுகின்றது. அடுத்து தற்போதைய சூழ்நிலையில் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேச அபிவிருத்திக்கு அர்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம். மக்களிடையே வீட்டுத்தோட்டம், சிறு தானியப் பயிர்ச்செய்கைகளை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் குடும்ப பங்கீட்டு அட்டை மீளாய்வின் பின் 14 நாட்களுக்குள் மீள வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக முறைப்பாடுகள் இருப்பின் தெரியப்படுத்தினால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா அவர்கள் 2016 ஆம் ஆண்டு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட பலர் குடியேறவில்லை. அதே சமயம் பலர் வீடு இல்லாமல் சிரமப்படுகின்றனர். வீட்டுத் திட்ட தெரிவுகள் சரியான முறையில் இடம்பெறுவதில்லை. இத் தெரிவுகள் பாரபட்சமாக இடம்பெறுகின்றது. கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கடற்தொழில் தொழிலாளர்கள் எரிபொருள் இன்மையால் தொழிலுக்கு செல்ல முடியாமல் வாழ்வாதாரம் இன்றி இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். சமுர்த்தி உதவு தொகை பெறுவதற்கு குறித்த அலுவலகத்தை துப்பரவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி இவை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் பலாலி தெற்கில் காணியில் மதில் அமைக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் அச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு விட்டது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீட்டுத்தோட்ட பயிர்செய்கை நடவடிக்கைகளினை மேற்பார்வை செய்வதற்கு வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.
- ❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் கழிவகற்றல் வாகனத்திற்கான ஒலியமைப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். எமது பாரம்பரிய இடமான குருந்தூர் மலையில் விகாரை அமைக்கப்பட்டு வருவதை வன்மையாக கண்டிக்கின்றேன் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்குவது தொடர்பான நடவடிக்கை பற்றி வினாவினார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்றே செயற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது காலை 11.57 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: சு.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.இராமலிங்கம் பகீரதன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.